எம்.சி.ஓ.பி எண்: 1528 /2019 தேதி: 10.03.2026

எ.மசா. : 1

பெயர் : ஜவகர்

த/பெ. : செந்தமிழ்செல்வன்

வயது : 35

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசராணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ.மசாஆ1 முதல் 4 வரை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் 3வது எதிர்மனுதாரர் வாகனத்திற்கு முறையான ஓட்டுநர் உரிமம் மற்றும் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரி.

**2ம்எதிர்மனுதாரர்தரப்புகுறுக்கு விசாரணை**

எங்கள் வாகனத்திற்கு பின்புறம் 1வது எதிர்மனுதாரரின் வாகனம் இடித்ததாக முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எங்கள் வாகன ஓட்டுநர்தான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்துள்ளார். எங்கள் ஓட்டுநர் தீடிரென்று பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டது என்றாலும் அவருடைய தவறை மறைக்க அவர் முன்கூட்டியே காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் ஓட்டுநர் மீது தவறு இருப்பதால் 50சதவீதம் இழப்பீட்டை நாங்கள் தரவேண்டும் என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.